| | |
|---|---|
| Liberté • Égalité • Fraternité<br>RÉPUBLIQUE FRANÇAISE<br>MINISTÈRE DE LA JUSTICE | 7<br>**உரிமைகள் பிரகடனம்**<br>**காவலில் இருக்கும் ஒரு சிறுவருக்கு கொடுக்க**<br>**(10ல் இருந்து 13 வயது வரை உள்ளவர்கள்)** |

**கீழ் இருக்கும் தகவல்களை நீங்கள் புரிந்துகொள்ளும் மொழியில் உங்களுக்கு கிடைக்கவேண்டும்**.

***நீங்கள் காவலில் இருக்கும் காலம் முற்றிலும்.இந்த ஆவணத்தை வைத்து கொள்ளலாம்***

நீங்கள் காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று உங்களுக்கு தெரிவிக்கிறோம். குறைந்த பட்சம் 5 வருட சிறை தண்டனை குறிய குற்றம் செய்தீர் அல்லது செய்ய முயற்சி செய்தீர் என்று சந்தேகத்திற்குரிய பல கடுமையான மற்றும் இணக்கமான குறியீடுகள் இருக்கின்றது.

நீங்கள் சம்மந்தப்பட்ட இந்த குற்றத்தின் சட்ட குறிப்பு, நடைபெற்ற திகதி மற்றும் நடைபெற்ற இடத்தை தெரிந்துகொள்ளும் உரிமை உங்களுக்கு இருக்கின்றது. அத்துடன் காவலில் வைக்க படுவதற்கு உள்ள காரணங்களையும் நீங்கள் தெரிந்துகொள்ளல்லாம்.

நடந்த அந்த சம்பவங்களை பற்றி நீங்கள் சொல்வது இருபத்திநான்கு மணி நேரம் நீங்கள் காவலில் இருக்கும் போது கேட்கப்படும்.

அந்த தவணைக்கு பிறகு, அரசாங்க தரப்பு வழக்கறிஞர் (அல்லது நீதிபதி அல்லது சிறார் நீதிபதி), மீண்டும் பன்னிரெண்டு மணி நேரம் உங்களை காவலில் வைத்திருக்க முடிவு கூறலாம். சாத்தியமானால், நீங்கள் தண்டனை அதிகாரிக்கு முன் காண்பிக்க படுவீர்கள், தேவைபட்டால் ஒளி ஒலி கலந்தாய்வு மூலமாக செயல்படலாம்.

காவல் நேரம் முடிந்ததும், நீங்கள் அரசாங்க தரப்பு வழக்கறிஞர் முடிவால் (அல்லது நீதிபதி அல்லது சிறார் நீதிபதி), அந்த தண்டனை அதிகாரி இடம் காண்பிக்க படுவீர்கள், அல்லது விடுவிக்க படுவீர்கள்.

**மேலும் உங்களுக்கு இருக்கின்ற உரிமைகள் என்னவென்று தெரிவிக்கபடுகிறது**:

**சில நபருக்கு தெரிவித்தல்**

அதிகாரி அல்லது போலீஸ்காரர் உங்கள் பெற்றோருக்கு அல்லது உங்கள் பாதுகாப்பாளர், அல்லது உங்களை பொறுப்பாக பார்த்துகொள்கிற நபர் அல்லது உங்கள் பொறுப்பை ஏற்ற பொது பணிக்கு நீங்கள் காவலில் இருப்பதை தெரிவிப்பார்.

நீங்கள் வெளிநாட்டை சேர்ந்தவராக இருந்தால், உங்கள் நாட்டின் தூதரக அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளலாம்.
எனினும் விசாரணை தேவைகளுக்கு அரசாங்க தரப்பு வழக்கறிஞர் (அல்லது நீதிபதி அல்லது சிறார் நீதிபதி) உங்கள் விண்ணப்பங்களை எதிர்க்க வாய்புக்கள் உள்ளன தவிர்க்கமுடியாத காரணங்கள் இருந்தால் தவிர, இந்த செய்முறைகள், உங்கள் கோரிக்கை நேரத்தில் இருந்து அதிகபட்சம் 3 மணி நேரத்திற்கு ஏற்படும்.

## ஒரு மருத்துவரால் பரிசோதிக்கபடலாம்

அரசாங்க தரப்பு வழக்கறிஞர் (அல்லது நீதிபதி அல்லது சிறுவர் நீதிபதி) உங்களை பரிசோதிப்பதற்கு ஒரு இலவச மருத்துவரை நியமிப்பார். உங்கள் காவல் நேரம் அதிகரித்தால், அரசாங்க தரப்பு வழக்கறிஞர் (அல்லது நீதிபதி அல்லது சிறுவர் நீதிபதி) மறுபடியும் உங்களை பரிசோதிக்க ஒரு மருத்துவரை நியமிப்பார்.

## அறிக்கைகளை செய்ய, கேள்விகளுக்கு பதிலளிக்க அல்லது மௌனமாக இருக்க

உங்கள் பெயர் விவரங்களை தெரிவித்த பிறகு, விசாரணை தோறும், உங்களுக்கு இருக்கும் உரிமைகள்:
- அறிக்கைகளை செய்ய
- உங்களிடம் கேட்கப்படும் கேள்விகளுக்கு பதிலளிக்க
- அல்லது மௌனமாக இருக்க

## ஒரு வழக்கறிஞரின் உதவி பெறலாம்

- <u>வழக்கறிஞரை தேர்ந்து எடுப்பது</u>

காவலில் இருக்கும் நேரம் தொடங்கியதும், மற்றும் காவலில் இருக்கும் நேரம் அதிகரித்தால், அந்த அதிகரிப்பு நேரம் தொடங்கும் போதே, நீங்கள் விருப்பப்பட்ட ஒரு வழக்கறிஞரை கேட்கலாம். நீங்கள் உங்களுக்கு விருப்பமான வழக்கறிஞரை தேர்ந்தெடுக்க முடியாத சூழ்நிலையிலோ அல்லது நீங்கள் தேர்ந்தெடுத்த வழக்கறிஞரை தொடர்ப்பு கொள்ள முடியாது என்றால், நீங்கள் ஒரு அரசாங்க இலவச வழக்கறிஞரை கேட்கலாம்.

உங்கள் வழக்கறிஞரை தேர்ந்தெடுப்பவர் உங்கள் பெற்றோராக இருக்கலாம், <u>அல்லது</u> உங்கள் காப்பாளர், <u>அல்லது</u> நீங்கள். ஒப்படைக்கப்பட்ட பொதுப்பணி துறை அல்லது அந்த பணியை சேர்ந்த ஒரு நபராக இருக்கலாம்.

இல்லை என்றால் போலீஸ் அதிகாரி அல்லது அரசாங்க தரப்பு வழக்கறிஞர் (அல்லது நீதிபதி அல்லது சிறுவர் நீதிபதி) உங்களுக்கு ஒரு வழக்கறிஞர் உங்களுக்கு உதவவேண்டும் என்று நியமிக்கலாம்.

- <u>வழக்கறிஞரின் உதவி மற்றும் தலையீட்டிற்கு உள்ள நேரம்</u>

வழக்கறிஞர் :
- நம்பகத்தன்மையை உறுதிசெய்கின்ற நிலையில் ; உங்கள் இடம் 30 வினாடிகள் பேட்டி காணுவார்.

- விசாரணைகளும், நேருக்கு நேர் நடைபெறும் நேரத்திலும் உதவலாம்.

அப்படியானால் உங்கள் முதல் விசாரணை, உங்கள் பெயர் விபரங்களை கேட்க இருந்தால் தவிர, உங்கள் வழக்கறிஞர் இல்லாமல், அவரை கூப்பிட்ட இரண்டு மணிநேரத்திற்கு முன் நடைபெறாது. ஆனால், உங்கள் முதல் விசாரணை, அரசாங்க தரப்பு வழக்கறிஞர் (அல்லது நீதிபதி அல்லது சிறுவர் நீதிபதி) முடிவில், உங்கள் வழக்கறிஞர் இல்லாமலே உடனடியாக நடைபெறலாம், அது ஆய்வு தேவைகளுக்காக.

உங்கள் வழக்கறிஞர், விசாரணை நடைபெறும் நேரத்தில் வந்தால், உங்கள் கோரிக்கையால் அதை நிறுத்தி, உங்கள் வழக்கறிஞர் உடன் நீங்கள் கலந்து உறையாடலாம்.

அரசாங்க தரப்பு வழக்கறிஞர் (அல்லது நீதிபதி அல்லது சிறுவர் நீதிபதி) மற்றும் காவல்நிலை மற்றும் சுதந்திர நீதிபதி, எனினும் கட்டாயமான மற்றும் விதிவிலக்கான காரணங்களால் விசாரணை தோறும் இருக்ககூடிய உங்கள் வழக்கறிஞர் சந்திப்பை 12 மணிநேரங்களுக்கு தள்ளி வைக்கலாம், இந்த முடிவை ஒரு முறையாவது புதுப்பிக்கலாம்.

### ஒரு மொழிபெயர்ப்பாளரின் உதவி

நீங்கள் பிரெஞ்சு மொழியை பேசுபவர் அல்லது புரிந்து கொள்பவராக இல்லை என்றால், உங்கள் விசாரணைக்கும், உங்கள் வழக்கறிஞர் உடன் முறையிடவும் உங்களுக்கு இலவசமாக ஒரு மொழிபெயர்ப்பாளர் உதவி கேட்க உரிமை இருக்கிறது.

### காவலில் இருக்கும் நேரத்தை நிறுத்துவதற்கான உரிமை

அரசாங்க தரப்பு வழக்கறிஞர் அல்லது நீதிபதி, அல்லது சிறுவர் நீதிபதி இடம், அந்த தண்டனை அதிகாரி, மேலதிகமாய் உங்களை காவலில் வைக்க வேண்டும் என்று முடிவெடுக்கும் போது அதை மேலதிகமாய் கூட்ட வேண்டாம் என்று நீங்கள் மறுப்பு தெரிவிக்கலாம்.

### உங்கள் கோப்பில் இருக்கும் சில பாகங்களை நீங்கள் பார்க்கலாம்

உங்கள் கோரிக்கையால் அல்லது உங்கள் வழக்கறிஞர், நீங்கள் அதிகபச்சம் உங்கள் காவல் நேரத்தை கூட்டுவதற்கு முன், பார்வையிட கேட்ககூடியது:
- நீங்கள் காவலில் இருகிறீர் என்று கூறுகிற ஆவணம்.
- உங்களை பரிசோதிக்க மருத்துவரின் சான்றிதழ் அல்லது சான்றிதழ்கள்.
- உங்கள் விசாரணைகளுக்குரிய ஆவணம் அல்லது ஆவணங்கள்.

### இனி வர போகின்ற சட்ட நடவடிக்கைகளை பற்றி தெரிந்து கொள்ள

காவல் நேரம் முடிவில், அரசாங்க தரப்பு வழக்கறிஞர் எவ்வித முடிவும் கூறவில்லை என்றால், 6 மாதங்கள் தவணையில் உங்கள் மாவட்ட அரசாங்க தரப்பு வழக்கறிஞரிடம் இனி வழக்கில் என்ன சட்ட நடவடிக்கைகளை எடுக்க இருக்கிறார் என்பதை நீங்கள் கேட்கலாம்.